# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 67/14 — 1979 දෙසැම්බර් 21 වැනි සිකුරාදා — 1979.12.21

67/14 ம் இலக்கம்—1979 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பீ. 21/78.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

டபிள்யூ. எம். ஏ. விஜேரட்ன பண்டா,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1979ம் ஆண்டு திசெம்பர் மீ 21ந் உ.

### கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கட்டளைச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1980 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. நீக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 85 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 (ப) என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட, கீழ்க்காணும் கட்டளைகளும், மேற்கூறிய சட்டத்தின் 85 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 140 ஆம் பிரிவின் கீழ் அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒரு கட்டளைச்சட்டமெனக் கருதப்படுவதுமான கீழ்க்காணும் நியதிச்சட்டமும், அத்தகைய கட்டளைகள், நியதிச்சட்டம் என்பவற்றின் கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றன.

(அ) 1976 ஒற்றோபர் 13 ஆம் தேதியதும், 234/9 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளை ;

(ஆ) 1976 நவம்பர் 29 ஆம் தேதியதும், 241/2 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளை ;

(இ) 1977 மார்ச் 30 ஆம் தேதியதும், 258/9 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளை ; அத்துடன்

(ஈ) 1977 மார்ச்சு 30 ஆம் தேதியதும், 258/9 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஆயுள்வேத நிறுவக நியதிச்சட்டம்.

3. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் என அறியப்படும் ஒரு நிறுவகம் (அது இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்படல் வேண்டும்.

4. நிறுவகமானது இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும் ; இப்பல்கலைக் கழகம் இதனகத்துப் பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

5. சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகட்கும், ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றிற்கும் அமைய, நிறுவகம் பின்வருவனவற்றைச் செய்யத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மாணவரை அனுமதித்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில் ஆணைக்குழு அங்கீகரிக்கக்கூடிய வாறாக உண்ணாட்டு மருத்துவக் கல்வியின் அத்தகைய கிளைகளில் போதனையையும் பயிற்சியையும் ஏற்பாடு செய்தல் ;

(இ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு உண்ணாட்டு மருத்துவக் கல்வியின் பல்வேறு கிளைகளிலும் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கத்துக்கெனத் தேர்வுகள் நடாத்துதலும், அத்தகைய தேர்வுகளில் சித்தியடைந்திருப்பதோடு, நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகம் துணைவிதிகளினால் விதித்துரைக்கக்கூடிய வேறு நிபந்தனைகளையும் திருப்திசெய்துள்ள ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவை வழங்குதற்குத் தகவுடையரென விதந்துரைத்தலும் ;

(ஈ) உண்ணாட்டு மருத்துவக் கல்வியின் பல்வேறு கிளைகளிலும் வழங்கப்படவேண்டிய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் தீர்மானித்தல் ;

(உ) ஆசிரியர், மாணவர், கல்விமான்கள் ஆகியோரைப் பரிமாற்றுவதன் மூலம், அல்லது வேறு வகையில் நிறுவகத்தின் நோக்கங்களோடு ஒத்த நோக்கங்களைக் கொண்டவையும் இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ளவையும் ஆன பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் ;

(ஊ) துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலான கல்வி இடங்களிலும், நிறுவகத்திற்கு அனுமதிகோரும் ஆட்கள் அல்லது நிறுவகத்திலுள்ள மாணவர்கள் சித்தியடைந்த தேர்வுகளையும் கல்விக் காலங்களையும் அல்லது கற்கைக் காலங்களையும் நிறுவகத்தின் அத்தகைய தேர்வுகட்கும் கல்விக் காலங்களுக்கும் அல்லது கற்கைக் காலங்களுக்கும் அல்லது அவற்றின் அத்தகைய பாகங்கட்கும் சமமானவை என அங்கீகரித்தலும், எந்நேரத்திலும் அவ் அங்கீகாரத்தைக் கைமீட்டலும் ;

(எ) நிறுவகத்தின் நோக்கத்திற்காக நூலகங்களையும், ஆய்கூடங்களையும், வேறு கட்டிடங்களையும், போதிக்கும் நோக்கத்துக்காகவோ, பயிற்சி நோக்கத்துக்காகவோ அல்லது ஆராய்ச்சி நோக்கத்துக்காகவோ நிறுவுதலும், சாதனம் அளித்தலும், பேணுதலும் ;

(ஏ) பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள், நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடிய வேறு பதவிகள் என்பவற்றை நிறுவுதல், இல்லாதொழித்தல், இடைநிறுத்திவைத்தல் என்பன தொடர்பாகப் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல் ;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும், புலமைப் பொருளுதவிகளையும், ஏழைக் கல்வியுதவிகளையும், பதக்கங்களையும் வேறு பரிசில்களையும், நிறுவுதலும், வழங்குதலும் ;

(ஒ) நிறுவகத்தின் மாணவர், ஆசிரியர், அலுவலர், ஊழியர் ஆகியோரின் வதிவிடம் ஒழுக்காறு, நலம்பாடு ஆகியவற்றை ஒழுங்குபடுத்தலும், ஏற்பாடு செய்தலும் ;

(ஓ) வதிவிட மண்டபங்களைத் தாபித்து முகாமை செய்தலும், மாணவர்க்கு வதிவிட வசதிதருமனைகட்கு உரிமம் வழங்கலும், நிறுவகத்திலுள்ள மாணவரின் வதிவிற்குத் தேவையான அத்தகைய வசதிகள், சேவைகள் என்பவற்றை வழங்குதலும் ;

(ஔ) மாணவர் கடன் பெறும் நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யும் துணைவிதிகளுக்கு இணங்க வங்கிகளிலிருந்தும் வேறு முகவர் நிலையங்களிலிருந்தும் நிறுவகத்தின் மாணவர் கடன் பெறுவதற்கு உதவுதல் ;

(க) கற்கை நெறிகளை அல்லது கற்கை நெறிகளின் பாகங்களைப் பல்கலைக்கழகம், நிறுவகம் ஆகியவற்றிற்கு வெளியேயுள்ள இடங்களில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யும் எவையேனும் துணைவிதிகட்கிணங்க அவற்றை அவ்வாறு நடாத்த ஒழுங்குகள் செய்தல் ;

(ங) கட்டணங்களைக் கோரிப் பெற ஏற்பாடு செய்யும் ஏதேனும் விதிக்கிணங்கக் கட்டணங்களை கோருதலும் பெறுதலும் ; அத்துடன்

(ச) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும், அவை மேற்கூறிய தத்துவங்களின் இடைநேர் விளைவானவையாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி செய்தல்.

6. பின்வருவோர் நிறுவகத்தின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ; அத்துடன்

(ஆ) எந்தப் பதவியை வகிப்பவர் இந்தப் பந்தியின் நோக்கத்துக்காக ஓர் அலுவலராக இருக்கிறாரோ அந்தப் பதவி எனக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

7. (1) முதலாவது பணிப்பாளரை ஆணைக்குழு நியமித்தல் வேண்டும். அடுத்துவரும் ஒவ்வொரு பணிப்பாளரும் ஆணைக்குழுவினாலேயே நியமிக்கப்படல் வேண்டும் ; ஆனால், நிறுவகத்தின் முகாமைச் சபை விதந்துரைத்த மூன்று பேர் அடங்கிய குழுவிலிருந்தே நியமிக்கப்படல் வேண்டும்.

(2) ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் பணிப்பாளராக நியமிக்கப்படின், அத்தகைய நிறுவனம் அவ்வாறு நியமிக்கப்பட்ட அத்தகைய பணியாட்டொகுதி உறுப்பினரைப் பணிப்பாளர் பதவி ஏற்கவென விடுவித்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பணிப்பாளரும் முன்னரே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது (4) ஆம் உப்பந்தியின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதிக்கு அல்லது அவர் தமது அறுபத்தைந்தாம் ஆண்டை நிறைவுசெய்யும் வரை, இவற்றுள் எது முதல் நிகழ்கின்றதோ அது வரை, பதவி வகித்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பணிப்பாளரும், அந்நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட ஒரு விசேட கூட்டத்தில் முகாமைச் சபையின் மொத்த உறுப்பினருள் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டிப்பு வாக்கின் பேரில் ஆணைக்குழுத் தவிசாளரினால் பதவியிலிருந்து அகற்றப்படல் வேண்டும். அத்தகைய விசேட கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர், பணிப்பாளர் அல்லாத வேறு ஆள் ஒருவரை அத்தகைய விசேட கூட்டத்திற்குத் தலைமை தாங்கவெனத் தம்முள்ளிலிருந்து தெரிவுசெய்தல் வேண்டும்.

(5) பதவிதுறக்கும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் பணிப்பாளர் ஒவ்வொருவரும், பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு உடன் முன்னர் ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினராக இருந்திருந்தால், அவர் தம் அறுபத்தைந்தாம் ஆண்டை நிறைவாக்கியிராவிடின் அத்தகைய உயர் கல்வி நிறுவனத்திலுள்ள நிலையான பதவிக்கு மீண்டும் செல்லலாம்.

(6) பணிப்பாளர், லீவு, சுகவீனம், இலங்கையிலில்லாமை காரணமாக அல்லது வேறு காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், ஆணைக்குழு அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துதற்குத் தகுந்தவையென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பல்கலைக் கழகப் பதிவாளர் அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு, (2) ஆம் உப்பந்தியின் கீழ் ஒரு நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை, அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துதற்குத் தகுந்தவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும் ; அத்தகைய ஒழுங்குகளைச் செய்யும் வரை பல்கலைக்கழகப் பதிவாளர் அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

8. (1) பணிப்பாளர், நிறுவகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அந்நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்வி அலுவராகவும் இருத்தலும் வேண்டும் ; அவர் முகாமைச் சபையின் பதவிவழி உறுப்பினராகவும் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் ஒவ்வொரு பகுதிக் குழுவின் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். நிறுவகத்தின் வேறு ஏதேனும் அதிகாரசபையின் அல்லது குழுவின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமளித்துப் பேசுவதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும் ; ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினராயிருந்தாலன்றி, அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்க உரித்துடையவராதலாகாது.

(2) முகாமைச் சபையால் அதற்கெனப் பணிப்பாளருக்குக் காலத்துக்குக் காலம் சட்டமுறையாக விடுக்கப்படக் கூடிய அத்தகைய பணிப்புகட்கிணங்க, சட்டத்தினதும் ஏதேனும் தொ்தான சாதனத்தினதும் ஏற்பாடுகளை, அவை நிறுவகத்தோடு தொடர்புபட்ட அளவுக்கு, முறையாகக் கடைப்பிடித்தலை உறுதிசெய்தல் பணிப்பாளரது கடமையாதல் வேண்டும் என்பதுடன், அந் நோக்கத்துக்கு அவசியமென அவர் கருதக்கூடியனவான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பணிப்பாளர் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அவர் அத்தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(3) முகாமைச் சபையின் முடிவுகளுக்குப் பயனளித்தல் அல்லது பயனளித்தலை உறுதிப்படுத்தல் பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளரே நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராயிருத்தல் வேண்டும்.

(5) நிறுவகத்துள் ஒழுக்காற்றைப் பேணுவதற்கு பணிப்பாளரே பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும்.

9. நிறுவகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவாதல் வேண்டும் :— அதாவது

(i) முகாமைச் சபை ;

(ii) பகுதிக் குழு அல்லது பகுதிக் குழுக்கள் ; அத்துடன்

(iii) அத்தகைய அதிகாரசபைகளாகவிருப்பதற்கெனக் கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வேறு குழுக்கள்.

10. முகாமைச் சபை (அது இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் கல்விக் குழுவாகவும் நிறைவேற்றுக் குழுவாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர் :— அதாவது

(அ) பணிப்பாளர் ;

(ஆ) உயர் கல்வி என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(இ) சுகாதாரம் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஈ) ஆயுள்வேத ஆணையாளர் ;

(உ) பண்டாரநாயகா ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(ஊ) மத்திய ஆயுள்வேத வைத்தியசாலையின் மருத்துவக் கண்காணிப்பாளர் ;

(எ) பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித் துறைத் தலைவர் ; அத்துடன்

(ஏ) நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் தலைவர்.

(2) பின்வரும் மற்றைய உறுப்பினர் :— அதாவது

(அ) பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித் துறை உறுப்பினரால் தம்முள்ளிருந்து தெரிவுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர் ;

(ஆ) ஆயுள்வேத மருத்துவப் பேரவையால் தமது சொந்த உறுப்பினருள் இருந்து நியமிக்கப்பட்ட ஓர் உறுபபினர் ; அத்துடன்

(இ) பண்பாடு, கல்வி, உயர்தொழில் அல்லது நிருவாகச் செயலகுகளில் சிறப்புச் சேவை ஆற்றியுள்ள ஆட்களுளிருந்து ஆணைக்குழு நியமித்த எட்டு உறுப்பினர் :

ஆயின், எவ்வாறுயினும், நியமிக்கப்பட்டோருள் குறைந்தது ஐந்து உறுப்பினராவது உண்ணாட்டு மருத்துவ உயர்தொழில் உறுப்பினர்களுளிருந்து நியமிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

11. (1) பணிப்பாளரே சபையின் தவிசாளராதல் வேண்டும் ; அவரே சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகித்தல் வேண்டும். ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் தலைமை வகிக்க இயலாதவராயிருப்பின் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்த எவரேனும் உறுப்பினரைத் தலைமை வகிக்கவெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட அல்லது தெரிவுசெய்யப்பட்ட எவரேனும் உறுப்பினா, முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, விடயத்துக்கேற்ப அவரின் தெரிவு அல்லது நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீளத் தெரிவு செய்யப்பட அல்லது நியமிக்கப்படத் தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது பதவிக் காலம் முடிவடைவதன் முன்னர் பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துவருபவர், அவர் முன்னரே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன் இருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும் :

ஆயின், மேலும், தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், எவ் அந்தஸ்தின் அல்லது எவ் உறுப்பாண்மையின் பயனைக் கொண்டு சபையின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவராயிருந்தாரோ அவ் அந்தஸ்தை அல்லது உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் வரை மட்டுமே அப்பதவியை வகித்தல் வேண்டும்.

(3) சபையின் தெரிவுசெய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர் பணிப்பாளருக்கு முகவரியிட்டுத் தமது கைப்படக்கடிதம் எழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டுத் தமதுகைப்படக் கடிதம் எழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(5) வராமைக்கான லீவின்றி சபையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சமுகமளிக்கத் தவறின், அவர் சபை உறுப்பினர் என்ற தம் பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும் ; அதனால் எற்படும் வெற்றிடத்தை நிரப்புதற்கு ஆணைக்குழு தக்கவோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(6) சபையின் உறுப்பினர் ஒருவர் எந்த ஊதியத்துக்கும் உரித்துடையவராதலாகாது ; ஆனால் பதவிவழி உறுப்பினர் அல்லாத உறுப்பினர் ஒருவர்க்கு, நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும் அத்தகைய படிகள் கொடுக்கப்படலாம்.

(7) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினராக இருத்தல் வேண்டும்.

(8) சபை அவசியமாகும் போதெல்லாம் கூடுதல் வேண்டும் ; எவ்வாறுயினும் ஓர் ஆண்டுக்கு எட்டுத் தடவைகளுக்குக் குறையாது கூடுதல் வேண்டும்.

(9) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதும் போதெல்லாம் அல்லது சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினருக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் கிடைக்கப் பெறுவதன் மேல் வாரத்துக்குள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

12. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது, இக்கட்டளைச்சட்டத்தால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது, நிறுவகத்திலுள்ள போதனை, கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றின் மீது கட்டுப்பாட்டையும் அவற்றின் பொது நெறிப்படுத்துகையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பந்திகளினால் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும் கட்டுப்படுத்தலும், நிருவகித்தலும் ;

(ஆ) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும் தீர்மானித்தலும் ;

(இ) குறித்த நோக்கங்களுக்காக நிறுவகத்தின் கையடைவில் வைக்கப்பட்ட நிதிகள் எவற்றையும் நிருவகித்தல் ;

(ஈ) நிறுவகத்துக்கு அளிக்கப்படும் மரண சாதனக் கொடைகள், நன்கொடைகள், வேறு ஆதன வழங்கல்கள் ஆகியவற்றை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெற்றுக்கொள்ளலும் ஏற்றுக்கொள்ளலும் ;

(உ) நிறுவகத்தின் ஆண்டு அறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் சீர்தூக்கிப்பார்த்தலும் அத்தகைய அறிக்கையையும் கணக்குகளையும் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தலும் ;

(ஊ) நிறுவகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளைப் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தலும் ;

(எ) சம்பந்தப்பட்ட பகுதிக்குழு அல்லது பகுதிக் குழுக்களுடன் கலந்தாலோசித்து உண்ணாட்டு மருத்துவக் கல்வியின் பல்வேறு கிளைகளில் வழங்கப்படவேண்டிய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றையும், அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றிற்குத் தகைமைபெற விரும்பும் மாணவர் பின்பற்ற வேண்டிய கற்கை நெறிகளையும் பயிற்சியையும், சித்தியடைய வேண்டிய தேர்வுகளையும், திருப்தி செய்ய வேண்டிய நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) எக்கருமம் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கருமத்துக்காகத் துணை விதிகளை வரைதலும் சட்டமாக்கப்படுவதற்காகப் பல்கலைக்கழகப் பேரவைக்கு அத்தகைய வரைவுகளைச் சமர்ப்பித்தலும் :

ஆயின், எவ்வாறுயினும், பகுதிக்குழு அல்லது பகுதிக் குழுக்கள் அளிக்கும் அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர் அன்றி, சம்பந்தப்பட்ட கற்கைநெறிகள், தேர்வுகள் என்பன தொடர்பான துணைவிதி எதுவும் வரையப்படலாகாது ;

(ஐ) சம்பந்தப்பட்ட பகுதிக்குழு அல்லது பகுதிக் குழுக்கள் அளிக்கும் அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர் கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பிலான ஒழுங்குவிதிகளை வரைதலும் அத்தகைய வரைவுகளைப் பல்கலைக்கழகப் பேரவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஞ) எக்கருமம் தொடர்பாக விதிகள் ஆக்கப்பட வேண்டும் அல்லது ஆக்கலாம் என அதிகாரம் அளிக்கப்பட்டதோ அக்கருமம் தொடர்பாக விதிகளை வரைதலும், அத்தகைய வரைவுகளை, விடயத்திற்கேற்ற வகையில், சட்டமாக்குவதற்காகப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கோ அல்லது மூதவைக்கோ சமர்ப்பித்தலும் ;

(ஓ) நிறுவகத்தின் வேலையைக் கொண்டு நடாத்துதற்குத் தேவையான கட்டிடங்கள், வளவுகள், தளபாடங்கள், சாதனங்கள், வேறு பொருள்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடுசெய்தல் ;

(ஔ) பல்கலைக்கழகத்துக்குப் பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(i) பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள் விரிவுரையாளர் பதவிகள், நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக் கூடியனவான வேறு பதவிகள் ஆகியவற்றை நிறுவுதல், இல்லாதொழித்தல் அல்லது நிறுத்திவைத்தல் ; அத்துடன்

(ii) நிறுவகத்திற்கு நியமிக்கப்பட வேண்டிய ஆசிரியர்கள், அலுவலர்கள், மற்றைய ஊழியர்கள் ஆகியோரின் தகைமைகள் ;

(க) நிறுவகத்தின் ஊழியத்திலுள்ள ஆட்களை நிறுத்திவைத்தல், விலக்குதல் அல்லது வேறு வகையில் தண்டித்தல் பற்றிப் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல் ;

(ங) நிறுவகத்தின் ஆசிரியர்கள், தேர்வாளர்கள் என்போராக ஏற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான அத்தகைய ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(ச) சம்பந்தப்பட்ட பகுதிக் கிளை அல்லது பகுதிக் கிளைகளின் அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்த பின் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(i) இப்போதுள்ள கற்கைப் பகுதிகளை மீளவமைத்தல், புதிய கற்கைப் பகுதிகளை அமைத்தல் ஆகியவற்றிற்காய திட்டங்கள் ; அத்துடன்

(ii) உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கிளைகளை அந்தந்தக் கற்கைப் பகுதிகட்குக் குறித்தொதுக்கல் ;

(ஞ) தகுந்தவையென அது கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்த குழுக்களை நியமித்தல், அவற்றின் விசாரணை விடயங்களைக் குறித்துரைத்தல், அவற்றின் அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்தலும் திரிபுகளுடனோ, திரிபுகளின்றியோ அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தல் ;

(ட) சம்பந்தப்பட்ட பகுதிக்குழு அல்லது பகுதிக் குழுக்களின் கலந்தாலோசனையுடனும் பல்கலைக்கழகம், ஆணைக்குழு ஆகியவற்றின் ஒருப்பாட்டுடனும் கற்கைநெறிகட்கு மாணவரை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல் ;

(ண) நிறுவக மாணவர்களின் பொது நல்வாழ்வை மேம்படுத்துதற்காக மாணவர்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதான வேண்டிய நலம்புரி சபை ஒன்றை நியமித்தலும், அத்தகைய சபையின் அமைப்பு, தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றைக் குறித்துரைத்தலும் ;

(த) பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானம் உட்பட நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் கீழ், நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை எப்பிணைப்பொறுப்புகளில் முதலீடு செய்தல் சட்டமுறையானதோ, அப்பிணைப்பொறுப்பு எதிலும் முதலீடு செய்தலும், அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு அத்தகைய எவையேனும் பணங்களை இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தலும், அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தலும், அல்லது உடனடிச் செலவுக்குத் தேவைப்படாததான அத்தகைய பணங்களின் ஏதேனும் பகுதியை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதலும் ; அத்துடன்

(ந) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் அவற்றைப் பிரயோகிப்பதற்கு வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படாதுள்ள நிறுவகத்தின் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல் :

ஆயின், சபையானது, ஏதேனும் கல்விசார் விடயம் பற்றித் தோதான கற்கைச் சபை அதன் அபிப்பிராயத்தைப் பதிந்து சபைக்கு அனுப்பிவைப்பதற்கான சந்தர்ப்பத்தை அக்கற்கைச் சபைக்கு முதலில் கொடுத்திருந்தாலொழிய, கல்விசார் விடயம் தொடர்பான தீர்மானம் எதுவும் சபையினால் நிறைவேற்றப்படலாகாது.

ஆயின், மேலும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் அன்றி அவ்வாறு நிறைவேற்றப்பட்ட எத்தீர்மானத்தின் மீதும் செயலாற்றுதலாகாது.

இப்பந்தியில் " கல்விசார் விடயம் " என்பது தோதான கற்கைச் சபையின் கட்டுப்பாட்டிற்கும் பொது நெறிப்படுத்துகைக்கும் அமைந்த ஏதேனும் விடயம் என்று பொருளாகும்.

13. நிறுவகமானது, உண்ணாட்டு மருத்துவக் கல்வியின் கீழ்வரும் ஒவ்வொரு கிளைக்கும், அத்துடன் முகாமைச் சபையின் விதப்புரையின் பேரில் ஆணைக்குழு அங்கீகரித்த உண்ணாட்டு மருத்துவக் கல்வியின் வேறு ஒவ்வொரு கிளைக்கும், ஒரு கற்கைப் பகுதியைத் தாபித்தல் வேண்டும் :—

(1) ஆயுள்வேதம் ;

(2) சித்தவைத்தியம் ; அத்துடன்

(3) யூனானி வைத்தியம்.

14. (1) ஒவ்வொரு கற்கைப் பகுதியும் ஒரு பகுதித் தலைவரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர் நிறுவகத்தின் முழு நேர அலுவலராயும், அப்பகுதியின் நிருவாகத் தலைவராயும் கல்விசார் தலைவராயும் இருத்தல் வேண்டும். அவர், பணிப்பாளரின் விதப்புரையின் பேரில் அப்பகுதியிலுள்ள ஆசிரியர்களுளிருந்து சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு பகுதியினதும் தலைவர் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) லீவு பெற்றுக் கடமைக்கு வராதிருத்தல் காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக, ஒரு பகுதித் தலைவர் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருக்குமிடத்து அத்தகைய காலத்துக்கு பகுதித் தலைவர் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்காக, சம்பந்தப்பட்ட பகுதியின் வேறு ஓர் ஆசிரியரைப் பணிப்பாளர் நியமித்தல் வேண்டும். எவ்வாறுயினும் பகுதித் தலைவர் ஒருவர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவிதுறக்குமிடத்து, அல்லது வேறு காரணத்துக்காக மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராயிருக்குமிடத்து, பகுதித் தலைவர் பதவியானது வறிதாகியுள்ளதெனக் கருதப்படல் வேண்டமென்பதுடன், (1) ஆம் உட்பிரிவுக்கு இணங்கப் புதிய பகுதித் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

15. (1) ஒவ்வொரு கற்கைப் பகுதியும் ஒரு பகுதிக் குழுவினைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அது பின் வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பகுதித் தலைவர், இவரே தவிசாளராயிருத்தல் வேண்டும் ;

(ஆ) பணிப்பாளர் ;

(இ) நிறுவகத்தில் போதனை அளிப்பவராய் அவர்தம் நியமனத்தில் அத்தன்மையில் உறுதிப்படுத்தப்பட்ட கற்கைப் பகுதியின் அத்தகைய ஆசிரியர்களும் வேறு பணியாட்டொகுதியினரும் ; அத்துடன்

(ஈ) கற்கைப் பகுதிக்கு இயைபான உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கிளையில் மேம்பாடுற்ற ஆட்களுளிருந்து சபையால் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் உறுப்பினரல்லாத மூவர்.

(2) ஏதேனும் பகுதிக் குழு, சபையின் ஒருப்பாட்டுடன், குறித்த ஒரு நோக்கத்திற்காகவும் குறித்த ஒரு காலப் பகுதிக்கும் ஆள் ஒருவரை அல்லது ஒருவர்க்கு மேற்பட்ட ஆட்களை உடன்சேர்க்கலாம் ; ஆனால் அவ்வாறு உடன்சேர்க்கப்பட்ட ஆள் எவரும் தேர்தலுக்கு நிற்கவோ அல்லது அத்தகைய குழுவின் கூட்டத்தில் வாக்களிக்கவோ உரிமை கொண்டிருத்தலாகாது.

(3) பதினோராம் பந்தியின் 2, 4, 5 ஆகிய உட்பந்திகளின் ஏற்பாடுகள், ஏதேனும் பகுதிக் குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவர்க்கும், ஒவ்வொருவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பகுதிக் குழுவும் ஒரு செயலாளரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர் (1) ஆம் உட்பந்தியின் (இ) என்னும் வாசகத்தின் கீழ், குழுவால் அதன் உறுப்பினருளிருந்து தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

(5) ஏதேனும் பகுதிக் குழுக் கூட்டத்தின் கூட்ட நடப்பெண், உடன்சேர்க்கப்பட்ட உறுப்பினர் எவரேனும் இருந்தால் அவர் நீங்கலாக, மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு பகுதிக் குழுவும் அவசியமாகும் போதெல்லாம் கூடுதல் வேண்டும் ; எவ்வாறுயினும் ஓர் ஆண்டிற்கு பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

16. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பகுதிக் குழுவும் சம்பந்தப்பட்ட உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கிளையிலுள்ள போதனை, கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுவான நெறிப்படுத்துகையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு பகுதிக் குழுவும் (1) ஆம் உட்பந்தியினல் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, சம்பந்தப்பட்ட உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கிளை தொடர்பாகப் பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) சபை அதற்கு ஆற்றுப்படுத்திய ஏதேனும் கருமத்தைச் சீர்தூக்கிப்பார்த்து அறிக்கை செய்தல் ;

(ஆ) அந்த உண்ணாட்டு மருத்துவக் கிளையிலுள்ள கற்கை நெறிகள், கற்பிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள், தேர்வுகள் என்பன சம்பந்தமான எல்லாக் கருமங்கள் பற்றியும் சபைக்கு விதப்புரைகளும் அறிக்கைகளும் சமர்ப்பித்தல் ;

(இ) சிறப்பான ஏதேனும் விடயத்தை அல்லது விடயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து அதன் மீது அல்லது அவற்றின் மீது அறிக்கை செய்யும் நோக்கத்திற்காக, பகுதிக் குழு உறுப்பினர் அல்லாத ஆட்களை உள்ளடக்கக் கூடிய குழுக்களை நியமித்தல் ;

(ஈ) கற்கை நெறிகள், தேர்வுகள் ஆகியவற்றுக்கு மாணவரை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(உ) அந்த உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கிளையிலுள்ள கற்கை நெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைதலும், அத்தகைய வரைவுகளைச் சபைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஊ) ஆசிரியர்கள், தேர்வாளர்கள் என்போராக ஏற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான அத்தகைய ஆட்களைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(எ) அந்த உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கிளையின் விதித்துரைத்த தேர்வுகளில் சித்தியடைந்தவராயும் விதித்துரைத்த வேறு நிபந்தனைகளைத் திருப்தி செய்தவராயும் அந்தக் கிளையிலுள்ள பட்டங்கள், டிப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவை அளிக்கப்படுவதற்குத் தக்குடையவரான ஆட்களைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசில்கள் ஆகியவற்றுக்கான போட்டிக்குரிய முறையையும் நிபந்தனைகளையும் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசில்கள் ஆகியன அளிப்பதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஒ) சபைக்கு பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(i) இப்போதுள்ள கற்கைப் பகுதிகளை மறு மீளவமைத்தல், புதிய கற்கைப் பகுதிகளை அமைத்தல் ஆகியவற்றிற்காய திட்டங்கள், அத்துடன்

(ii) உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கிளைகளை அந்தந்தக் கற்கைப் பகுதிகட்குக் குறித்தொதுக்கல்.

17. அரசாங்கத்தின் நிதி ஆண்டு எதுவோ அதுவே நிறுவகத்தின் நிதி ஆண்டாதல் வேண்டும்.

18. (1) நிறுவகமானது “ உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிதியம் ” (அது இதனகத்துப் பின்னர் “ நிதியம் ” எனக் குறிப்பீடு செய்யப்படும்) எனவழைக்கப்பட வேண்டிய ஒரு நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அந் நிதியத்தினுள் பின்வருவன செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் ;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ;

(இ) உதவிக்கான மானியங்களாகப் பாராளுமன்றத்தினல் வழங்கப்பட்டவையும் நிறுவகத்தின் ஆணைக் குழுவினல் செலவழிக்கப்பட்டவையுமான பணங்கள் ; அத்துடன்

(ஈ) எவ்வகை மூலத்திலிருந்தும் பெறப்பட்டவையான நிறுவகத்துக்குரிய வேறெல்லாப் பணங்களும்.

(2) குறித்த ஒரு மாத காலத்துள், நிதியத்துள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய பொழிப்பொன்று தோதான வருவாய்த் தலைப்புகளின் கீழ் வகுக்கப்பட்டு, பணிப்பாளரால் ஆணைக்குழு அறிவதற்காக அடுத்துவரும் மாதத்தின் முடிவிற்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

19. பணிப்பாளர் பின்வரும் கடமைகளை உடையவராய் இருத்தல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் கணக்குகளைக் கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல் ;

(ஆ) நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்தகைய பணங்களைத் தகுந்த கணக்குத் தலைப்புகளுக்கு வரவு வைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழு தேவையெனக்கோரும் அத்தகைய மூன்றாண்டுக் கொருமுறையான மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் முகாமைச் சபைக்காகத் தயாரித்தல் :

ஆயின், எவ்வாறாயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் வருமானம் நிறுவகத்தின் கணக்குகளில் தனித்தனியாகக் கணக்கு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக, அல்லது அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் எந்நோக்கத்துக்காக அல்லது எக்குறிக்கோளுக்காக முறையாக வழங்கப்பட்டனவோ, அந்நோக்கம் அல்லது அக்குறிக்கோள் அல்லாத வேறு நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படலுமாகாது.

20. (1) நிறுவகமானது, அதன் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகளையும் புள்ளி விவரங்களையும் பற்றிய ஆண்டுக் கூற்றொன்றை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் அந்நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

21. ஓர் உயர் கல்வி நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வதற்கு இயைபாகவுள்ள சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் அத்தகைய ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வதற்கும் அது தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

22. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகிய வற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அவசியமெனக் கருதக்கூடியவாறான அலுவலர்களையும், ஆசிரியர்களையும், வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் பல்கலைக்கழகத்தால் அதன் சொந்த பணியாட்டொகுதியினரிலிருந்து விடுவிப்பதன் மூலம் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும், அல்லது விடயத்திற்கேற்ப ஆணைக்குழுவால் அல்லது பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் பகுதி X ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரின் நியமனத்துக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் ஓர் அலுவலர், ஆசிரியர் அல்லது ஊழியர் முழு நேர அடிப்படையில் சேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, நிறுவகமானது அவருக்கு பல்கலைக்கழகத்திலுள்ள அவரது நிலையான பதவிக்கான சம்பளத்தையும் படிகளையும் கொடுத்தல் வேண்டும். வேறேதேனும் விடயத்தில், சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியர்க்கு அல்லது ஊழியர்க்கு, பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அது தீர்மானிக்கக்கூடிய அத்தகைய படிகளை நிறுவகம் கொடுக்கலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

23. நிறுவகத்தின், வேறு ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராக எவரேனும் ஆள் முறையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா, பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது உடன் சேர்க்கப்பட்டுள்ளாரா, என்பது பற்றி, அல்லது அதன் உறுப்பினராகவிருப்பதற்கு உரித்துடையவரா என்பது பற்றி ஏதேனும் கேள்வி எழின், அக்கேள்வி ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும், அது பற்றிய ஆணைக்குழுவின் முடிவு இறுதியானதாயிருத்தல் வேண்டும்.

24. நிறுவகத்தின் வேறு ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஒரு வெற்றிடம் அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக மட்டும், அல்லது அத்தகைய உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படலாகாது.

25. இக்கட்டளைச்சட்டத்தில்—

"சட்டம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப்பொருள்படும் ;

"தோதான சாதனம்" என்பது மேற்கூறிய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச்சட்டம், நியதிச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி, அல்லது விதி எனப் பொருள்படும் ;

"துணைக்குழு" என்பது மேற்கூறிய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும் ;

"உண்ணாட்டு மருத்துவக் கல்விக் கிளை" என்பது ஆயுள் வேதம், சித்த வைத்தியம், யூனானி வைத்தியம் அல்லது பல்கலைக்கழகமும் நிறுவகமும் செய்த விதந்துரையின் பேரில் ஆணைக்குழு அங்கீகரித்த ஏதேனும் வேறு கிளை எனப் பொருள்படும் ; அத்துடன்

"ஆசிரியர்" என்பது பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர் அல்லது உதவி விரிவுரையாளர் என, அல்லது எப்பதவி வகிப்பவர் ஓர் ஆசிரியராக உள்ளாரோ அப்பதவியெனக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்படும் வேறேதேனும் பதவி வகிப்பவர் எனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.